**குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்வி நிறுவனம் - 2022**

---

## 1 நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் (''கல்வி நிறுவனம்'') 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

கல்வி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்வி நிறுவனத்திற்கான ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கல்வி நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கல்வி நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | --------------- | ---------------- | ------------------- | ---------- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| | (i)நிதி ஒழுங்குவிதிக் கோவை 571 | கல்லூரியில் மீள செலுத்தப்பட வேண்டிய 02 ஆண்டுகள் விஞ்சிய மொத்தம் ரூபா.766,765 ஆன வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப-டவில்லை. | இந்த வைப்புகள் மாணவர்களின் வேண்டு-கோளுக்கமைவாக விடுவிக்கப்படுகிறது. கற்கைநெறிகள் பூர்த்தி செய்வதற்கு சில ஆண்டுகள் செலவ்தால் இந்த வைப்புகளை அவ்வப்போது பல ஆண்டுகளின் பின்னர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| | (ii)நிதி ஒழுங்குவிதிக் கோவை 880 | அரசாங்கத்தின் நிதி, வருமானம், முத்திரை அல்லது பொருட்களை பொறுப்பேற்றல் அல்-லது பொறுப்பாக இருத்தல் அரசாங்க-த்தின் பணம் பகிர்ந்-தளித்தல் அல்லது முத்திரை அல்லது பொருட்களை விநி-யோகித்தல் தொடர்பில் நிருவாக ரீதியாக பொறுப்பு கூற வேண்டிய அல்லது அதிகாரம் கையளிக்க-ப்படுவதன் கீழ் குறித்த பணிகளை ஒப்படை-க்கப்பட்டுள்ள அலுவ-லர்களும், அரசாங்க கணக்கிற்கு ஏற்புடைய-தாயினும், சான்றுப்படு-த்திய பணவுறுதிகளை ஒப்பமிடுபவர்களும் தமது பணிகளை நேர்மையாக நிறை-வேற்றுகின்றனர் என்பதற்கு 612 ஆவது அதிகாரமான அரசா-ங்க அலுவலர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் படி பிணை வைக்கப்படுதல் | நிதி ஒழுங்குவிதி 880 பிரகாரம், பிணை கட்டளைச் சட்டத்தின் படி பிணை பணம் வைப்புச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுத்தல். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டுமாயினும் அவ்வாறு பணியாற்றியிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தாமை காரணமாக 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.26,850,988 ஆன சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வில்லை. | 2017-2022 ஆண்டுகளுக்கான நிலையான சொத்துக்களின் பதிவேடு தற்போதும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2014-2016 ஆம் ஆண்டுகளுக்கான நிலையான சொத்துக்களின் பதிவேடு தாயரிக்கப்படுகிறது. | திறைசேரி சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | கணக்கு ஆண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் வரையுள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், கல்வி நிறுவனத்தால் 2022 கணக்கு ஆண்டுக்கு ஏற்புடையதாக வருடாந்த அறிக்கை 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட-வில்லை. | பதில் வழங்கப்படவில்லை | திறைசேரி சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 <u>நிதிசார் விளைபயன்</u>

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 1,164,355 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 515,696 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. 648,659 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஊழியர் செலவினம், வழங்கல் செலவினம் மற்றும் சேவை செலவினங்களின் அதிகரிப்பு பிரதான காரணங்களாகின.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்-டின் இறுதி திகதியில் ஹெக்-டயார் 5.41 ஆன காணியை, கல்வி நிறு-வனம் தாபித்து 7 ஆண்டுகளுக்கு அதிக-மான காலம் சென்றிரு-ப்பினும், சம்பந்தப்பட்ட காணியை கல்வி நிறுவனத்திடம் கையக-ப்படுத்துவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ள-ப்படவில்லை. | காணியின் உரிமை கையகப்படுத்தல் தொடர்-பில் தற்போது திறன் அபிவிருத்தி அமைச்சு, சனாதிபதி ஆணைக்குழு என்பவற்றிடமும், பிரதேச செயலாளரிடமும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கல்லூரி தாபிக்கப்பட்டுள்ள காணியின் உரிமை கல்வி நிறுவனத்தினால் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கற்கைநெறிகளின் பொருட்டு பதிவாகும் மாணவர்களால் கற்கை-நெறி முடிவுறுத்தப்பட வேண்டிய காலப்பகுதி, பரீட்சை சித்தியடைய வேண்டிய அமர்வுகள் மற்றும் பரீட்சை சித்திய-டையாமை அல்லது பரீட்சைக்கு தோற்றாமை என்பன காரணமாக மாணவர் பதிவு இரத்துச் செய்தல் தொட-ர்பாக உரிய வழிகாட்ட-ல்களை அடையாளம் காணப்படாமையால் கல்வி நிறுவனத்தின் கல்வி நிவடிக்கைகளை ஆரம்பித்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பதிவாகிய 752 மாணவர்-களுக்கிடையில் கற்கை-நெறிகளை வெற்றிக-ரமாக பூர்த்தி செய்யாத 315 மாணவர்கள் தற்போது வரை நிறுவ-னத்தின் கற்கைநெறி-களை கற்கின்ற மாண-வர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | தற்போது குறித்த மாணவர்கள் மீண்டும் பரீட்சைகளில் தோற்றி தமது கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடிப்ப-தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கற்கைநெறிகளுக்கு ஏற்புடையதாக குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல் அறிமுகப்படுத்தப்பட்டு அதன்படி பணியாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கற்கைநெறிகளில் காலம் முடிவடைந்துள்ள 2015 தொடக்கம் 2018 கற்கை ஆண்டு வரை ஒவ்வொரு கற்கைநெறிகளின் செய-லாற்றுகை பிரகாரம், கற்கைநெறி பொருட்டு பதிவாகும் மாணவர்-களுக்கிடையில் மீளாய்-விற்கான ஆண்டு இறுதியில் டிப்ளோமா சான்றிதழ் ஆயினும் பெற்றுக்கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 50% இற்கும் குறைந்த கற்கைநெறிகளின் எண்ணிக்கை 21 ஆக காணப்பட்டது. | பரீட்சை பெறுபேறுகளை அதிகரித்து டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக்கொள-ளும் சதவீதம் அதிகரித்-துக்கொள்வதற்கு பல்-வேறு நடவடிக்கைகளை திட்டமிடல். | கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடிவுறுத்துவதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் காண்காணிப்பு மாணவர்களிடம் வழங்குதல் வெண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வருடாந்த செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 04 பந்தி பிரகாரம் பாராளுமன்ற சட்ட-ங்கள் மூலம் தாபிக்க-ப்பட்ட கல்வி நிறுவன-ங்களின் சட்டவாக்க சட்டத்தின் நோக்கங்-களை நிறைவேற்றி-க்கொள்வதற்காக வருடாந்த செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | ஆலோசனைகளுக்கமைவாக எதிர்காலத்தில் தயாரிக்க-ப்படவுள்ள வருடாந்த செயற்றிட்டத்தில், உள்ளட-க்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |